# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்
## தயாரிப்பு மற்றும் பணிகள்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2025 மேயில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளில் மேம்பாடுகளை எடுத்துக்காட்டுகின்றன**

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2025 மேயில் 55.5 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் விரிவடைதலினை எடுத்துக்காட்டுகின்றது.** அனைத்து துணைச் சுட்டெண்களும் நடுநிலையான அடிப்படை அளவிற்கு மேல் மீண்டெழுந்து 2025இல் பதிவாகிய பருவகால மெதுவடைதலிலிருந்து மீட்சியினை எடுத்துக்காட்டுகின்றன.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்களில் அதிகரிப்பிற்கு புடவைகள் மற்றும் அணியும் ஆடைத் தயாரிப்பு துறை முக்கிய காரணமாக அமைந்தது. மேலும், கொள்வனவுகளின் இருப்பு முன்னைய மாதத்தின் மட்டங்களைப் போன்று அதே அளவில் காணப்பட்டது. மேலும், தொழில்நிலை துணைச் சுட்டெண் மாதகாலப்பகுதியில் குறிப்பாக புடவைகள் மற்றும் அணியும் ஆடை தயாரிப்புத் துறை காரணமாக மீட்சியை சுட்டிக்காட்டியது. அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரம் காலப்பகுதியின் போது நீட்சியடைந்து காணப்பட்டது.


***கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு***

| மாறி | ஏப். | மே | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **40.1** | **55.5** | **+** | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது** |
| புதிய கட்டளைகள் | 36.5 | 56.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| உற்பத்தி | 30.0 | 55.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 44.9 | 56.0 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 41.0 | 50.0 | + | வீழ்ச்சியிலிருந்து நடுநிலை |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 57.0 | 56.7 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்தவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கை, கேள்வியில் படிப்படியான அதிகரிப்பை எதிர்பார்த்து சாதகமாகக் காணப்படுகின்றது. எனினும், மின்சாரக் கட்டணங்களில் மேல்நோக்கிய திருத்தங்கள் மற்றும் மத்திய கிழக்கில் பதற்றமான நிலைமை என்பன பற்றி பதிலிறுப்பாளர்கள் எச்சரிக்கையுடன் இருக்கின்றனர்.

**தயாரிப்பு கொ.மு.சு 55.5**
**2025 மே**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலகளாவிய தோற்றப்பாடு:
கொமுசு தயாரிப்புத் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| **இந்தியா** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **சீனா** | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| **ஐக்கிய அமெரிக்கா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **ஐக்கிய இராச்சியம்** | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| **யூரோ வலயம்** | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2025 யூன் 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2025 மேயில் 57.0 பெறுமதியைப் பதிவுசெய்து, கடந்த ஆண்டின் அதே காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட அதனையொத்த போக்கினைப் பின்பற்றி பணிகள் நடவடிக்கைகளில் மெதுவான விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றது.**

அநேகமான துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் மூலம் துணையளிக்கப்பட்டு 2025 மேயில் வியாபார நடவடிக்கைகள் விரிவடைந்தன. அதற்கமைய, வியாபார நடவடிக்கைகள் தொடர்புபட்ட நிதியியல் பணிகள் அதிகரித்த கடன்வழங்கல் நடவடிக்கை மூலம் துணையளிக்கப்பட்டு தொடர்ந்து மேம்பட்டன. மேலும், தொழில்சார் பணிகள் மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் என்பவற்றில் வியாபார நடவடிக்கைகளும் மாதகாலப்பகுதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. எனினும், மாதத்திற்கு மாதம் அடிப்படையில் சுற்றுலாப் பயணிகள் வருகைகளின் வீழ்ச்சிக்கமைவாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபானப் பணிகளிலுள்ள வியாபார நடவடிக்கைகள் மாதகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

புதிய வியாபாரங்கள் 2025 மேயில் அதிகரித்தமைக்கு நிதியியல் பணிகளில் அவதானிக்கப்பட்ட விரிவடைதல்கள் பிரதான காரணமாக அமைந்தன.

பல கம்பனிகளுக்கிடையில் அறிக்கையிடப்பட்ட ஓய்வுபெறுதல்கள் மற்றும் பதவி விலகுதல்கள் காரணமாக தொழில்நிலை 2025 மேயில் வீழ்ச்சியடைந்தது.


***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***

| மாறி | ஏப். | மே | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **60.6** | **57.0** | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| புதிய வியாபாரங்கள் | 56.7 | 54.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 55.0 | 44.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 47.5 | 45.0 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 75.8 | 73.7 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளுடன் அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் தொடர்ந்தும் மேம்பட்டுள்ளது.

**கொ.மு.சு**
**பணிகள்**
வியாபார நடவடிக்கைச் சுட்டெண்
2025 மே
**57.0**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு:**
**கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| யூரோ வலயம் | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[i], 2025 யூன் 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.